**CC.No**. 9/2025

**Date**: 18.04.2026

**ம.சா. 1. உமா மகேஷ்வரி, த/பெ. பழனியப்பன், கோட்டையூர், காரைக்குடி**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**(வழக்கின் எதிரி ம.சா.ஆ–1 ஐ நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்தார். )**

**குறுக்கு விசாரணை**

**1) என்னை எப்படி தெரியும் என்றால் பெங்களூரில் உள்ள விவேகானந்தா சட்டக்கல்லூரியில் நான் உங்களுடன் ஒரே கல்வியாண்டில், ஒரே வகுப்பில் படித்ததன் அடிப்படையில் தெரியும். எந்த வருடத்தில் இருந்து என்னுடன் பேச ஆரம்பித்தீர்கள் என்றால் 2016 முதல் 2019 வரையிலான கல்வியாண்டில் நாங்கள் படித்தோம் சரியாக எந்த தேதி என்று குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை. நான் படித்து முடித்துவிட்டு கல்லூரியை விட்டு சென்ற பின்னர்தான் தாங்கள் என்னுடன் பேச வந்தீர்கள் என்றால் சரியாக எனக்கு நினைவில்லை. உங்களை என்னிடம் அறிமுகம் செய்து வைத்தது நம் இருவருக்கிடையேயான பொது நண்பர் இந்திரா காந்தி என்றால் சரியாக நினைவில்லை. எனக்கும் இந்திராக காந்தியின் அறையில் தங்கி இருந்தவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு இந்திரா காந்தியின் நண்பர் தற்கொலைக்கு முயன்றபோது இந்திரா காந்தியின் அழைப்பின் பேரில் நான் நீங்கள் தங்கியிருந்த அறைக்கு வந்து சமரசம் செய்தேன் என்றால் மேற்படி சங்கதி நடந்தது உண்மைதான் ஆனால் நீங்கள் என்னை நேரடியாக தொடர்பு கொள்ளவில்லை.**

**2) மேற்படி நிகழ்விற்கு பின்புதான் தங்கள் என்னுடன் பேச ஆரம்பித்தீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் அடிக்கடி கல்லூரிக்கு வருவதில்லை. நான் ஒரு முறை எனது நண்பரான முத்தரசு என்பவருக்கு தொடர்பு கொள்ளும்போதுதான் அவரது கைப்பேசியை வாங்கி என்னுடன் பேசினீர்கள். பின்பு படிப்பு தொடர்பாக எனக்கு கன்னடம் தெரியாததால் என்னை தொடர்பு கொண்டு பேசி வந்தீர்கள் என்றால்**

சரியல்ல. நிறைய தமிழில் இளையராஜா பாடல்கள் எனக்காக பாடுவார் மேலும், எனக்காக பல பாடல்களை டெடிகேட் செய்துள்ளீர். எனவே உங்களுடன் நான் பேசி வந்தேன்.

3) நீங்கள் கல்லூரியில் 21 பாடங்களில் அரியர் வைத்திருந்தேன் என்றால் சரிதான். நான் தமிழ்நாட்டில் இருந்து வருவோர்க்கு கல்வி ரீதியாக உதவி செய்து வருகீறேன் என்பதை அறிந்து நீங்கள் என்னை உங்களது படிப்பிற்கும் உதவி செய்யுமாறு கேட்டீர்கள் என்றால் சரியல்ல. எனது அறிவுரையை ஏற்று நீங்கள் 6 பாடங்களில் தேரச்சி பெற்றீர்கள் என்றால் சரியல்ல. நான் உங்கள் நெருங்கிய நண்பர் என்பதால் நீங்கள் என்னுடன் பெங்களுர், மைசூர் மற்றும் தமிழ்நாடு பகுதிகளில் நிறைய இடங்களுக்கு வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 11.07.2021 அன்று பெங்களுரில் என்னை நீங்கள் சந்தித்தீர்கள் என்றால் நிறைய முறை சந்தித்து இருக்கிறேன் . மேற்படி தேதியில் சந்தித்தேனா என்று நினைவில்லை. 11.08.2021 ல் நீங்கள் என்னை காரைக்குடிக்கு வரச்சொல்லி சந்தித்தீர்கள் என்றால் சரிதான் ஆனால் தேதி நினைவில்லை. 11.07.2021 ல் பெங்களுரில் ரூ.50 ஆயிரமும், பின்பு 11.08.2021 ல் காரைக்குடியில் வைத்து என்னிடம் ரூ.1 லட்சமும் கடன் பெற்றீர்கள் என்றால் சரியல்ல. 05.01.2022 ல் நீங்கள் என்னை பாண்டிச்சேரிக்கு வர சொன்னீர்கள் என்றால் சரியல்ல. பாண்டிச்சேரிக்கு நீங்கள்தான் என்னை அழைத்து சென்றீர்கள். பாண்டிசேரிக்கு சென்று திரும்பும்போது ஒரு கோவிலுக்கு சென்றோம் என்றால் சரிதான்.

4) பாண்டிசேரி கோவிலுக்கு சென்றிருக்கும்போது நீங்கள் என்னிடம் ரூ. 1 லட்சத்து 20 ஆயிரம் கடனாக பெற்றீர்கள் என்றால் சரியல்ல. 21.02.2022 அன்று நான், நீங்கள் மற்றும் இந்திரா காந்தி ஆகியோர் HUBBLI க்கு சென்றோம் என்றால் சரியல்ல. நானும் இந்திரா காந்தி மட்டும்தான் அங்குள்ள பல்கலைகழகத்திற்கு சென்றோம். அப்போது உணவகத்தில் சாப்பிடும்போது நீங்கள் என்னிடம் ரூ. 2 லட்சம் வாங்கினீர்கள் என்றால் சரியல்ல. அப்போது மேற்படி இந்திராகாந்தியும் நான் கடன் கொடுப்பதை பார்த்தார் என்றால் சரியல்ல. 18.04.2022 அன்றும் நீங்கள் என்னை காரைக்குடியில்

சந்தித்தீர்கள் என்றால் சொல்லியிருக்கலாம். தேதி நினைவில்லை. அன்றைய தினம் என்னிடம் ரூ. 3 லட்சம் வாங்குனீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கல்யாணகுமார் என்பவரை என் கணவர் என்று செல்போனில் அறிமுகம் செய்து வைத்தீர்கள் என்றால் சரியல்ல, தாங்கள் தான் என்னிடம் கல்யாணகுமார் என்பவர் எனது கணவரா என்று கேட்டீர்கள். அதற்கு நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள் என்றால் நான் ஒன்றும் சொல்லவில்லை. கல்யாண குமார் என்பவர் காவல் துணை கண்காணிப்பாளராக பணி புரிகிறார் என்று சொன்னீர்கள் என்றால் சரிதான். கல்யாண குமாரின் மகள் திருமணத்திற்காக ரூ.6 லட்சம் என்னிடம் நீங்கள் பெற்று அவரது மகள் திருமணத்திற்கு நகை வாங்கி கொடுத்தீர்கள் என்றும் மேற்படி தொகை கல்யாண குமார் DSP–யாக உள்ளதால் அவருக்கு பரிசாக இருக்கட்டும் என்று நீங்கள் சொன்னீர்கள் என்றால் சரியல்ல.

5) அதன் பின்னர் நான், நீங்கள் மற்றும் இந்திரா காந்தி ஆகியோர் கும்பகோணத்தில் சந்தித்தோம் என்றால் சரிதான். அப்போது என்னிடம் ரூ. 1 லட்சம் என்னிடம் கடனாக வாங்கினீர்கள் என்றால் சரியல்ல. அதுபோல் நானும் உங்களிடம் ரூ. 4 லட்சம் பல்வேறு தேதிகளில் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 12 லட்சம் என்னிடம் வாங்கியுள்ளீர்கள். மேலும் அதற்கு ரூ. 11 ஆயிரம் மாதம் மாதம் எனது வங்கி கணக்கில் வட்டியாக செலுத்தி வந்துள்ளீர். நான் அவசர தேவையான வீடு கட்டவும், எனது அம்மாவின் சிகிச்சைக்காவும், கொடுத்த பணத்தை கேட்கும்போது நீங்கள் வட்டிக்கு பணம் வாங்கி தருவதாக என்னிடம் சொன்னீர்கள் என்றால் சரியல்ல. வட்டிக்கு வேண்டுமானால் பணம் வாங்கி தருகிறேன் என்றும், எனது நகைகளை அடமானம் வைத்தும் LIC ல் கடன் வாங்கியும் கடன் கொடுத்தேன் . அப்போது நீங்கள் என்னிடம் 2 காசோலைகளை கேட்டீர்கள் அதற்காக 554782 மற்றும் 554784 சிட்டி வங்கி, எம்.ஜி ரோடு, பெங்களூர் கிளை காசோலைகளை நான் கொரியர் மூலமாக எனது கையொப்பம் செய்து தங்களுக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பே எனது வீட்டிற்கு நீங்கள் வரும்போது 554783 என்ற எண் கொண்ட பூர்த்தி செய்த காசோலையை என்னிடம் கொடுத்து சென்றீர்கள்.

**6) நான் கொடுத்த பணத்தை கேட்கும்போது நீங்கள் காரைக்குடியில் உங்களுக்கு சொந்தமான இடத்தை விற்று பணம் தருவதாக சொன்னீர்கள் என்றால் சரியல்ல.**

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. )**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.18 18:23:44 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)